**டவர் ஹோல் மன்றம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டவர் ஹோல் மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்பு, பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து டவர் ஹோல் அரங்க மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதி அறிக்கைகள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகங்களை மேற்கொள்ளும் தரப்பினர்களதும் பொறுப்புக்கள்.

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடிகள் அல்லது தவறான விடயங்களால் நிகழும் அளவிடமுடியுமான போலியான அறிக்கைகளைத் தவிர்த்து நிதி அறிக்கைகளைத் தயாரிக்கத் தகுந்த வகையில் தேவையான உள்ளக நிர்வாகக் கட்டமைப்பை பேணுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் படும்போது, மன்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் மன்றத்தை கலைப்பதற்கு எண்ணுமேயானால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமேயானால் அன்றி தொடர் இயங்கும் நிலைப்பாட்டின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதும் மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குரிய விடயங்களை தெளிவு படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடற் செயற்பாடு சம்பந்தமாக மீளாய்வுப் பொறுப்பு, அவை தொடர்பான தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், மன்றத்தின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதி அறிக்கைகள் தயாரிக்கப் படுவதற்கு ஏற்ற விதத்தில் சுய வருமாம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்மந்தமாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

**1.4 கணக்காய்வு அதிகார எல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பாக அளவைக்குறிய நிச்சயமின்மை காணப்படுகின்றதா என்ற நிலை சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கியலுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான செற்பாடு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதிய நிச்சயமற்ற நிலை உள்ளது என நான் முடிவு செய்கின்றேன் எனில், நிதி அறிக்கைகளில் அவை தொடர்பானவற்றை

வெளிப்படுத்துவதில் எனது கணக்காய்வு அறிக்கையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாரான வெளிப்படுத்துகை போதியதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாரெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தொடர் செயற்பாடு இல்லாமல் போக முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

இயலுமான அளவுக்கு மற்றும் தேவைப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஆய்வு செய்யப்பட கணக்காய்வு விடயப் பொருள் விரிவாக்கப் பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பிக்கப் படுதல் சம்பந்தமாகப் பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யப் படுவதற்கு ஏற்ற விதத்தில் அதன் அமைப்பு, தொகுதி, செயல்முறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் முறையாக மற்றும் அளவைக்குறிய விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதா எனவும், மற்றும் குறித்த தொகுதி, செயல்முறை, புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் பயனுள்ள விதத்தில் பேணப்பட்டு வருகின்றதா எனவும்;

- ஏதேனும் குறித்த எழுதப்பட்ட சட்டத்துக்கு அல்லது மன்றத்தின் நிர்வாக சபையால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைக்கு ஏற்ப, மன்றம் செயற்பட்டுள்ளது எனவும்,

- தனது அதிகாரம், நிலைமை மற்றும் செயற்பாடுகளுக்கு உட்பட்டதாக செயலாற்றியுள்ளமை பற்றியும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்றிறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்தில் கால வரையறைக்குள் மற்றும் குறித்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கப்பட்ட வளங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பான கணக்களி பொறுப்பை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் ஆதனங்களுக்குள் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்களி பொறுப்பை, தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால வரையறைக்குள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படின் அவை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுத்தல் போன்றவற்றுக்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்குப் போதுமான "**சிறப்பாக திட்டமிடப்பட்ட**" உள்ளகக் கணக்கியற் கட்டுப்பாடுத் தொகுதி ஒன்றை நிறுவனம் நடாத்திச் செல்வது மிக முக்கிய விடயமாகும்.

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காதவைகள்**

| | குறித்த நியமக் குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயனுறுதிமிக்க ஆய்வுகாலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததனால் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் கிரயம் ரூபா 37,296,993 ஆன 09 வாகனங்களின் பயனுறுதிமிக்க ஆய்வுகாலத்தை மீண்டும் மீளாய்வு செய்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | தற்போது வாகனங்களை மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட இறுதி அறிக்கை கிடைத்துள்ளதால் 2022 ஆண்டினுள் கணக்கீடு செய்வதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | நியமத்தின் விதிமுறைகளின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | டவர் ஹோல் மன்றபத்திற்கு சொந்தமான ரூபா 161,750,000 கிரயமான பிரதான அலுவலக கட்டிடம் மற்றும் ரூபா 1,250,000 கிரயமான ஒலிமண்டபத்தை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பெறுமானத் தேய்வு தொடர்பான பந்தி பிரகாரம் 2017 ஆண்டு முதல் பேறுமானத் தேய்விடாத காரணத்தால் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்விடல் செலவினம் ரூபா 16,300,000 குறைவாக மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 81,506,962 இனால் (2017 – 2021 காலப் பகுதிக்கான பெறுமானத் தேய்வு) குறைத்துக் காட்டப்பட்டது. | 2022 ஆண்டு முதல் பெறுமானத் தேய்விட நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவினை சரியாக இனங்கண்டு கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எல்பிஸ்டன் மன்றத்தை நவீனமயமாக்க மேற்கொண்ட செலவை நிலையான சொத்தொன்றாக 2019 ஆண்டு முதல் இனங்கண்டிருந்த போதும் சரியாக பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்யாததால் 2021 திசெம்பர் 31 திகதியன்று திரண்ட பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 9,557,988 குறைவாகக் | 2022 ஆண்டின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | மன்றத்தை நவீனமயமாக்க மேற்கொண்ட செலவை நிலையான சொத்தொன்றாக இனங்கண்ட திகதி முதல் சரியாக பெறுமானத் தேவை கணக்கிட்டு கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டது. | | செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டிற்காக பிற்போடப்பட்ட செலவாக ரூபா 46,930,196 தொகை ஒன்று அரச மூலதன பெறுவனவு ஒதுக்கத்திலிருந்து அறவிட்டு பொதுத் ஒதுக்கத்திற்கு செலவு வைத்திருந்த போதும் பிற்போடப்பட்ட செலவினை இனங்காணும் அடிப்படை கணக்கு குறிப்பினூடாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆண்டின் பிற்போடப்பட்ட செலவினை இனங்காணும் அடிப்படையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | பிற்போடப்பட்ட செலவினை இனங்காணும் அடிப்படையை கணக்கு குறிப்பினூடாக வெளிப்படுத்த வேண்டும். |

## 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூலச் சான்றுகள் காணப்படாமை

| விடயம் | தோகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூ. | | | |
| ஒதுக்கம் | 79,368,600 | பல வருட காலமாக கணக்குகளில் முன் கொண்டு வரப்படும் 05 கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள்/ கோவைகள்/ பதிவேடுகள் | இம் மீதிகள் தொடர்பான எவ்வித தகவல்களையும் கண்டறிய முடியாததால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. டவர் ஹோல் மன்றத்தின் பெயரில் இம் மீதிகள் தொடர்பாக கணக்குகள் காணப்படுகின்றதா என அரச வங்கிகளிடம் விசாரிக்க ஆலோசக்கப்பட்டதுடன் மீதிகளை உறுதி செய்யும் கடிதம் தற்போது வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மன்றத்தின் கடந்த இறுதிக் கணக்கை பரிசோதித்து இதற்கான தகவல்லொன்றை கண்டறிந்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூ. 1,069,650 ஆன கடன்படுனர் நிலுவை கலாச்சாரத் திணைக்களத்திலிருந்து மற்றும் ரூ. 20,735 தொகை கலாச்சார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டியதாக நிதி அறிக்கைகளில் காட்டப்படடிருந்த போதிலும் அவ்வாறான செலுத்தப்பட வேண்டிய மீதிகள் இல்லை என அந் நிறுவனங்களினால் உறுதிப் படுத்தியுள்ளன. | அந் நிறுவனங்களிடம் இருந்து இந் நிலுவையை அறவிட பல தடவைகள் எழுத்து மூலம் கோரியுள்ளதுடன் இதுவரை அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக இது தொடர்பாக எதிர் பொறுப்பு சபைக்கு ஆலோசனைக்காக முன் வைக்க குறித்திற்கொண்டேன். | நிலுவை கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 1 ஆம் இலக்க டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 8 ஆவது பிரிவு மற்றும் மன்றத்திற்கு சொந்தமான சௌசிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள தரைப்பகுதியை மன்றத்திற்கு ஒப்படைத்தல் தொடர்பான 1980 ஒக்தோபர் 08 திகதிய விஷேட ஒப்படை பத்திரத்தின் விதி முறைகள் | இந்த காணியை மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்களை தேசிய நடன நடவடிக்கையை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு தேவையான கருமங்களுக்காக மாத்திரமன்றி வேறு கருமங்களுக்கு ஈடுபடுத்தக் கூடாது எனவும் அவ்வாறான கருமங்களுக்காக ஈடுபடுத்தப்படாவிடின் அப்போது அவை இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கு மீண்டும் உரித்தாக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மற்றத்திற்கு சொந்தமான சௌசிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதி நிர்மாண வேலை | டவர் மண்டப அரங்க மன்றம் மற்றும் இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 1986 மே மாதம் 15 ஆம் திகதி மாயா நாநாயக்கார பிரசித்த நொத்தாரிஸ் எழுதி உறுதிப்படுத்ததிய இலக்கம் 188 கொண்ட குத்தகை ஒப்பந்தத்தை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அவ் ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி அதிகார சபைக்கு 02 சந்தர்ப்பங்களில் 30 வருடங்கள் வீதம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 1997 இன் 11 ஆம் இலக்க டவர் மண்டப அரங்க மன்றச் (திருத்திய) சட்டத்தின் 6 ஆம் பிரிவு | மன்றத்தின் நோக்கங்களுக்கு முரணாக அரசு மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் சொசிரிபாய மழைய கட்டிடத்தை அகற்றி 08 மாடிகளுடனான பலநோக்கு வணிக கட்டிடமொன்று மற்றும் நீர்கொழும்பு ருக்மனிதேவி அரங்கம் அமைந்துள்ள காணியின் பல மாடிகளுடனான பலநோக்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது. | இம் 03 அரங்குகளும் உச்ச வணிக பெறுமதியான இடங்களில் அமைந்துள்ளதால் இந்த நிர்மாணங்கள் மூலம் மன்றத்திற்கு உச்ச வருமானமொன்றை ஈட்டுவதற்கு முடியுமானவதுடன் அவ்வாறு கிடைக்கும் வருமானத்தை சட்டத்தின் நோக்கங்களை மேற்கெள்வதற்கு ஈடுபடுத்த முடியுமாகும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணங்கள் 119(1), 119(2) மற்றும் 233 | • அங்கீகாரம் இன்றி 51 ஊழியர்களுக்கு 2019 மார்ச் 08 திகதி செலுத்தியிருந்த மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 1,438,435 தொகை சட்ட ரீதியற்ற கொடுப்பனவு ஆகையால் ஒரே முறையில் மீண்டும் அறவீடு செய்ய வேண்டிய போதும் 2020 ஒக்தோபர் வரை தாமதமாக்கி தவணைகளாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவை திணைக்களப் பணிப்பரளால் செலுத்திய இந்த மேலதிக நேர கொடுப்பனவிற்கு அங்கிகாரம் வழங்காததனால் 2020.08.27 திகதிய கடிதம் மூலம் செப்தெம்பர் மாதம் முதல் செலுத்திய நிலுவை மேலதிக நேர கொடுப்பனவு அறவிடப்படுகின் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | றது. | |
| | • மீண்டும் அறவீடு செய்யும் தவணைகளின் எண்ணிக்கை 12 ஐ மிகைக்குமாறு அறவீடு செய்வதற்கான அதிகாரம் அமைச்சுச் செயலாளருக்கு மாத்திரமே காணப்படுகின்ற போதிலும், அங்கீகாரம் இன்றி செலுத்ததிய மேலதிக நேர கொடுப்பனவினை 48 தவணைகளில் அறவீடு செய்வதற்காக பணிப்பாளர் நாயகம் அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதி அளவில் 21 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 612,345 தொகை மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டி இருந்தது. | மிகக் குறைந்த சம்பளம் பெறும் ஆளணியொன்று இருப்பதால் அது பற்றி கவனம் செலுத்தி பணிப்பாளர் நாயகத்தினால், செலுத்தியிருந்த மேலதிக நேர கொடுப்பனவு தொகையை தவணையாக அறவிட தீர்மானித்துள்ளதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ-12 கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) பிரிவு 4.2.6 | 2021 காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை நம்பிக்கை பொறுப்பு சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பிரிவுகள் 5.1.3 மற்றும் 5.2.1 | 2021 பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2022 ஜூன் 28 திகதியன்று சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டுடன் பாதிடப்பட்ட | நம்பிக்கை பொறுப்பு சபைக் குழு ஒன்றுகூடுதல தாமதமான காரணத்தால் 2021 | சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் உரிய திகதிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அகழ் விரிவான வருமானங்கள் கூற்று, பாதிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு பாதீடு 2021 ஜுன் மாதம் 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணங்களை எதிர் காலத்தில் தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) பிரிவு 6.5.3 | 2020 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை இவ் அறிக்கை திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 வருடாந்த அறிக்கைக்காக தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதால் குறித்த அறிக்கைகள் அச்சக நடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளது. அச்சகத்திலிருந்து கிடைத்த பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) பிரிவு 7.3 | நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் மீது 1997 முதல் செயற்படுத்தப்பட்டிருந்த மற்றத்தின் கைநூலிற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் இணக்கம் பெறப்பட்டிருக்கவில்லை | டவர் ஹோல் அரங்க மன்றத்தின் கைநூல் தயாரிக்கப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் கடந்துள்ளதால் நிகழ் காலத்திற்கு பொருத்தமானவாறு இக் கைநூலை திருத்துவதற்கு தொழிற் கல்வி நிறுவனத்திற்கு ஒப்படைத்துள்ளதுடன் அதனை தயாரித்தவுடன் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | 2021 ஆண்டு பாதீடு, செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு 2021 ஜுன் 28 ஆம் திகதி சமர்ப்பிக்ககப்பட்டிருந்ததுடன் உள்ளக கணக்காய்வு திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாட்டுகளுக்கான கட்டுநிதி தேவைபாட்டுத் திட்டம் சமர்ப்பிக்ககப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக தேவையான ஆவணங்களுடன் பாதீட்டை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | | | |
| | (i) பிரிவு 11.04 | பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளினூடாக அவதானிக்கப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகை அறிக்கையிடல் மற்றும் செயற்படுத்தல் அடுத்த நிதியாண்டில் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கால வரையறை பிரகாரம் நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளது. | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) பிரிவு 11.05 | பண்டக கணிப்பீட்டின் போது பொது 47 மூலம் அறிக்கையிடப்பட்ட பண்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் அடுத்த நிதியான்டில் மார்ச் 15 இற்கு முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கால வரையறை பிரகாரம் நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளது. | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேவை பின்னரான நலன்களாக | சீரற்ற நிதி நிலைமையின் | பணிக்கொடை |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடை செலுத்துவதற்காக 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 23,343,775 ஏற்பாடு செய்திருந்த போதும் அதற்கு நேரொத்த நிலையான வைப்புக்களின் முதலீட்டு பெறுமதி ரூபா 20,752,432 அனதால் ரூபா 2,591,343 ஆன முதலீட்டுப் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | மீது பணிக்கொடை ஏற்பாடு மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2023 ஆண்டினுள் அப் பற்றாக்குறையை நிவரத்திக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | ஏற்பாடு செய்வதற்கு நேரொப்பாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | 2021 நிதி அறிக்கைகளில் ஒதுக்கத்தின் கீழ் நடன களைஞர்களுக்கான சனாதிபதி நலன்புரி நிதியம் எனும் பெயரில் ரூபா 60,399,700 ஆன நிதிய மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதும் குறித்த நலன்புரி நிதியத்தின் பெயரிலான நிலையான வைப்பு கூட்டுத் தொகை ரூபா 70,999,700 ஆனது. அதன் பிரகாரம் நிதியத்தின் மீதி ரூபா 10,600,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஒதுக்கத்தின் கீழ் ரூபா 60,399,700 ஆக காட்டப்பட்டுள்ளது சனாதிபதி நலன்புரி நிதியத்திற்கு அவ்வப்போது கிடைத்திருந்த தொகைகளினது கூட்டுத்தொகையாகும். அவற்றை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து வட்டி வருமானத்தினால் கலைஞர்களுக்கு நலன்புரி நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டுள்ளன. நலன்கள் செலுத்திய பின்னர் ஏஞ்சிய மிகை தொகையை மீண்டும் முதலீடு செய்து அந் நிதியத்தை ரூபா 70,999,700 வரை வளர்கப்பட்டுள்ளது. இது வரை அம் மிகை தொகை (10,600,000) இறுதி கணக்குகளில் ஒதுக்கத்தின் கீழ் திரண்ட இலாபத்தினுள் உள்ளடங்கியுள்ளது. எதிர் காலத்தில் அத் தொகையை திரண்ட இலாபத்திலிருந்து சனாதிபதி நளன்புரி நிதியத்திற்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | சனாதிபதி நலன்புரி நிதியத்தின் வட்டி வருமானத்தை திரண்ட இலாபதிலிருந்து அகற்றி நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும். |

**1.9 வரி பிரமாணங்களுக்கு இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20(1) மற்றும் 102 பிரிவுகளிற்கு முரணாக மன்றத்தினால் | 1978 இன் 01 ஆம் இலக்க டவர்மண்டப அரங்க மன்ற சட்டத்தின் 13(2)பிரிவு பிரகாரம் | உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் விதிமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| 2018/2019 மற்றும் 2019/2020 வரி மதிப்பீட்டாண்டுகளுக்காக வருமான வரி செலுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன் வருமான வரிக்காக பதிவு செய்ய அல்லது வரி விலக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டவர்மண்டப அரங்க மன்றம் அனைத்து வருமான வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 77,244,494 ஆன பற்றாக் குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 96,531,981 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 19,287,487 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிற்கு அரச பங்களிப்பு ரூபா 12,900,000 தொகையினால் குறைந்திருந்த போதிலும், ஏனைய வருமானம் ரூபா 1,430,280 இனால் அதிகரித்தல் மற்றும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் ரூபா 3,264,526 இனாலும் பழுதுபார்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் ரூபா 3,197,475 தொகையினாலும் பாதுகாப்பு செலவினம் ரூபா 1,017,872 யினாலும் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 19,151,685 யினாலும் குறைந்தமை இந்த வளர்ச்சிற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 01 ஆம் இலக்க டவர்மண்டப அரங்க மன்ற சட்டத்தினை காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது சட்டத்தின் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். | சட்டத்தை திருத்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 06 திகதி மன்றத்தினால் முறையான அங்கீகாரத்துடன் மற்றும் முறையான நியமனம் கிடைக்காத பணிப்பாளர் நாயமொருவர் கையொப்பமிட்ட எழுத்து மூல குத்தகை ஒப்பந்தின் ஊடாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு மன்றத்திற்கு சொந்தமான சௌசரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதியை மீண்டும் 30 ஆண்டுகளிற்காக வளங்கப்பட்டிருந்தது. முதலாம் குத்தகை ஒப்பந்தம் | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை அரச நிறுவனம் ஒன்றாகையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பவில்லை. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை மன்ற வளவிலிருந்து அகற்ற சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முடிவடைந்து 06 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும் சட்ட ரீதியற்ற இரண்டாம் குத்தகை ஒப்பந்தத்தின் பதிவை இரத்துச் செய்து கொள்ள மற்றும் எவ்வித வாடகை பணமும் செலுத்தாது சட்டரீதியற்ற முறையில் மன்ற வளவில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை மன்ற வளவிலிருந்து அகற்ற சட்ட நடவடிக்கை எடத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) பிரிவு பிரகாரம் அமைச்சொன்றின் கீழ் உள்ள கணக்காய்வு செய்யப்படும் நிறுவனமொன்றில் உள்ளக கணக்காய்வை மேற்கொள்ள அந் நிறுவன கட்டுப்பாட்டு சபையினால் உரியவாறு நியமிக்கப்படும் தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டும். அவ்வாறாயினும் மன்றத்தின் அங்கீகார ஆளணிக்கு அங்கீகார உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் உட்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வாளர் பதிவியொன்று அங்கீகார ஆளணியில் உட்படுத்த மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளணி ஆட்சேர்ப்பு திட்டத்தை திருத்தும் சந்தர்ப்பத்தில் சமர்பிக்க குறித்துக் கொண்டேன். | தேசிய கணக்காய்வு சட்ட விதிமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | டவர் மண்டப அரங்க மன்றத்தினால் டவர் அரங்கு, எல்பிஸ்டல் அரங்கு மற்றும் ருக்மனிதேவி அரங்கு ஆகிய அரங்குகளிற்கு பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்ள தனியார் பாதுகாப்பு சேவை கம்பனியொன்றுடன் 2019 மார்ச் 11 திகதி முதல் 2020 மார்ச் 10 திகதி வரையான ஓராண்டு காலத்திற்கு எழுத்துமூல ஒப்பந்தத்திற்கு உட்பட்டிருந்ததுடன் மன்றத்திற்கு வழங்க | TF/AD/10/07 இலக்க 2019.05.07 திகதிய கடிதத்தினால் உரிய சேவகர்களின் எண்ணிக்கையை ஈடுபடுத்துமாறு அறிவித்திருந்த போதும் அது அவ்வாறு இல்லை என பின்னர் அவதானிக்கப்பட்டதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். உயிர்த்ததின தாக்குதலின் மீது அரங்க மண்டப வருமானம் குறைந்ததால் மன்ற வருமான நிலைமை கீழ் நிலைக்கானது. அதனால் பத்திரிகை | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் வருடாந்த சேவைக்காக பெறுகைகள் நடடிக்கை மேற்கொள்ள மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய பாதுகாப்பு சேவகர்களின் எண்ணிக்கையை வழங்காதிருக்கையில் 2020 பெப்ரவரி 17 திகதி முதல் 2022 சனவரி 11 திகதி வரை 10 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு வழங்கி ஒரே நிறுவனத்திடமிருந்து சேவையை பெற்றிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் வருடாந்த சேவைக்காக பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவித்தல்களை பிரசுரிக்க பெறுந்தொகை பணம் செலவானமை மற்றும் வைப்புப் பணத்தையும் மீட்க வேண்டி இருந்தமை அவ்வாறே அதன் போது அவர்களின் சேவை சீரான நிலையில் காணப்பட்டதால் 06 மாத காலத்திற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது சேவை நீடிப்பொன்றை வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அலுவலகம் மூடப்பட்டமை மற்றும் தனிப்படுத்தல் பிரமாணங்கள் மீது விலை மனு கோர முடியாமலிருந்தது. | |
| (ஆ) | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் விலை மனு ஆவனங்களை மதிப்பிட்டு குறைந்த விலை சமர்பித்துள்ள 02 நிறுவனங்களின் சம்பளம், சம்பள கட்டுப்பாட்டு சபையின் விலையிலும் குறைந்த பெறுமானத்தில் நிலவியமை மற்றும் 2 அரச நிறுவனங்களிற்கு சேவை வழங்குவதாக தகவல் சமர்பித்திருக்காத காரணத்தால் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மூன்றாம் குறைந்தபட்ச விலை சமர்பித்திருந்த தனியார் பாதுகாப்பொன்றை தெரிவு செய்திருந்ததுடன் 2021 ஆகஸ்ட் 18 திகதி பிரதேச பெறுகைகள் குழுவினால் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவில் இத் தீர்மானத்திற்கு இணக்கப்பாட்டை காட்டியிருந்தது. | பெறுகைகள் நடவடிக்கை பிரகாரம் அத் தனியார் பாதுகாப்பு கம்பனியை தெரிவு செய்திருந்த போதும் நிறுவனத்தின் நிதி நிலைமை தொடரந்தும் சீராற்று நிலவியதன் மீது அதன் போது பாதுகாப்பு சேவையை வழங்கும் நிறுவனத்திலும் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனத்திற்கு வருடாந்தம் 07 இலட்சம் அளவு தொகையொன்றை செலுத்த வேண்டியதால் மற்றும் இது நிறுவனத்தின் நிதி நிலைமையிற்கு தொடர்ந்தும் சீரற்றதாக பாதிப்பதால் முன்னர் நிலவிய விலைகளின் கீழ் (அதன் போது பாதுகாப்பு சேவையை வழங்கும் நிறுவனத்தின்) சேவையை பெற்றுக் கொள்ள முயன்ற போதும் அதற்கு பெறுகைகள் குழு தெரிவு செய்த நிறுவனம் இணங்காத காரணத்தால் பெறுகைகள் நடவடிக்கை பிரகாரம் அடுத்த இரண்டாம் குறைந்த பட்ச விலை சமர்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து முன்னர் நிலவிய விலைகளின் கீழ் பெற்றுக் கொள்ள நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் பிரதேச பெறுகைகள் குழுவின் தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தெரிவு செய்த | பெறுகைகள் குழு தீர்மானித்த | பெறுகை குழுவின் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திற்கு விலைமணு ஒப்படைத்து ஒப்பந்தம் கைச்சாத்திட வருமாறு அறிவித்து அந் நிறுவனம் அதனை ஏற்று செயலாற்றுகை காப்பொன்றையும் பணமாக வைப்புச் செய்திருந்த போதும் அந் நிறுவனத்துடன் எழுத்துமூல உடன்படிக்கைக்கு உப்படாது நிலவிய பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | விலையிலும் சேவையை வழங்கிக் கொண்டிருந்த நிறுவனத்தின் விலை பெறுமளவு குறைந்த பெறுமானமாகையால் நிலவிய தொகைக்கு சேவையை பெற்றுக் கொள்ள நம்பிக்கை பொறுப்பு சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தீர்மானம் கிடைக்கும் வரை நிலவிய பாதுகாப்பு சேவை வழங்கு நிறுவனத்திற்கு உடன்படிக்கையை தொடரந்தும் நீடிக்கப்பட்டது. நம்பிக்கை பொறுப்பு சபை பத்திரத்தை கவணித்த நம்பிக்கை பொறுப்பு சபை நிறுவனத்திற்கு கிடைக்கும் நலன்களை கருத்திற் கொண்டு காணப்படும் விலையிலேயே நிலவிய பாதுகாப்பு சேவை நிறுவனத்திடமிருந்து குறித்த சேவையை பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. | தீர்மாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இங்கு 2021/2022 ஆண்டில் பெறுகை செயற்பாடுகளை பூர்த்தி செய்ய ஓராண்டிற்கு கிட்டிய காலமொன்று கடந்திருந்த போதும், இறுதியில் பெறுகைகள் வழிகாட்டிற்கு முரணாக, கட்டுப்பாட்டுச் சபை கட்டளை சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படும் நிலவிய கம்பனிக்கு ஒப்பந்தத்தை ஒப்படைத்திருந்த போதும் அக் கம்பனியுடன் எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றிற்கு உட்பட மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய உடன்படிக்கை பிரகாரம் பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 16 பதவிகள் தொடர்பாக 26 வெற்றிடங்கள் | வெற்றிடமாக நிலவிய சில பதவிகளுக்காக 2020.12.21 மற்றும் 2021.01.21 திகதிகளில் நடாத்தவிருந்த நேர்முகப் | பல வருடங்களிலிருந்து பல ஆண்டுகலாக நிலவி வரும் |

| | | |
|---|---|---|
| காணப்பட்டதுடன் சிரேஷ்ட நிலை 03 பதவிகள் மூன்றாம் நிலை ஒரு பதவி இரண்டாம் நிலை 06 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலை 16 பதவிகளும் அதனுள்ளானது. | பரீட்சையை நடாத்த வேண்டாம் என தேசிய மரபுரிமை, நடனக் கலை மற்றும் கிராமிய கலைஞர்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் குருந் தகவல் ஊடாக ஆலோசனை வழங்கியுள்ளது. அனைந்து ஆட்சேர்ப்புக்களையும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தேசிய தொழிட் தகைமையை பூர்த்தி செய்துள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத காரணத்தால் இவ் வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. 2021.08.28 திகதிய (அரச செலவின மீளாய்வு) எனும் அமைச்சரவை பிரகடனம் மற்றும் அதன் தீர்மானம் பிரகாரம் ஊழியர் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. | வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் வெற்றிடங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களிலே முகாமைத்துவத்தினால் கண்டறிந்து விரைவாக வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2021 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் 35 நிகழ்ச்சித் திட்டம்/செயல் திட்டங்களுக்காக ரூபா 58 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் அவற்றில் 21 முழுமையாக செயற்படுத்தியிருக்காததுடன் அதற்காக ஒதுக்கியிருந்த தொகை ரூபா 13.478 மில்லியனாகும். | கோறோனா தொற்று நிலைமை காரணமால் 21 நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த முடியவில்லை. | தொற்று நிலைமை அல்லது வேறு பிரச்சினைகுரிய நிலைமைகளை முன்கூட்டி இணங்கான முடியுமான சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது யதார்தபூர்வமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் பிரிவின் மொத்த மனித மணித்தியாலமான 3184 மனித மணித்தியாலங்களில் 66 சதவீதம் அதாவது 2110 மனித மணித்தியாலங்கள் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் உள்ளக கணக்காய்வை திட்டமிட்டவாறு மேற்கொள்ளல் குறைந்த மட்டத்தில் நிலவியதாக அவதானிக்கப்பட்டது. | கோறோனா தோற்று காரணத்தால் திட்டமிட்ட கருமங்களை மேற்கொள்ள முடியவில்லை. | ஏற்படக்கூடிய எதிர்பாரா நிலைமைகளையும் கவனத்திற் கொண்டு திட்டங்கள் யதார்த்தபூர்வமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |